# இடைக்கால தமிழ்க் கல்வெட்டுகள் வழி அறியப்பெறும் படை நிர்வாகம்

# Military Administration of the Cholas as Gleaned From The Middleval Tamil Incriptions

*முனைவர் மா. பவானி*
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா

**Dr. M. Bhavani**
*Associate Professor and Head*
*Department of Epigraphy and Archaeology*
*Tamil University, Thanjavur, India*

## ஆய்வுச் சுருக்கம்

*படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு*
*(குறள் 381)*

*உறப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்*
*வெறுக்கையுள் எல்லாம் தலை*
*(குறள் 761)*

*மேற்சுட்டியக் குறகளுக்கொப்ப ஒரு அரசனின் பலம் முதன்மையில் அவன் பெற்றுள்ள வீரமிக்க படையை அடிப்படையாகக்கொண்டது. களத்திற்படும் துன்பங்களுக்கெல்லாம் அஞ்சாது வேந்தர்க்கு துணைநின்று பகைவரை வெல்லும் படையே ஒரு நாட்டிற்கு செல்வங்களுள் எல்லாம் தலையாய செல்வம் ஆகும். இப்படை தரைப்படை, கப்பல்படை, விமானப்படை, காவல்படை போன்ற பிரிவுகளை (உறுப்புகளை) கொண்டிருத்தல் வேண்டும் (புலியூர் கேசிகன் உரை* Thirukkural.net*) ஒரு அரசிற்கு படை என்பது முக்கியமானதொரு கருப்பொருளாகும். சங்க காலந்தொட்டு தமிழர்களை வீரத்தில் சிறந்து விளங்கியவர்கள் படைபல கொண்டவர்கள் என்பது நாம் அறிந்ததே. இடைக்காலத்தில் குறிப்பாக சோழர்கள்காலத்தில்கல்வெட்டுகள் வாயிலாக அறியப்பெறும் அவர்களது படை நிர்வாகம் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.*

*திறவுச் சொற்கள்: கல்வெட்டுகளில் படை, வலங்கை - இடங்கை, வேளைக்காரர், தண்ட நாயகம், நாயக்கத்தானம், வில்லாளி, வாளிலார்*

## Abstract

*PadaigudiKool Ministry Natparan Aarum*
*Udaiyaan Arasaru Lee Ru (Kural :381)*
*An Army, People, Wealth, Ministry, Friends and Forts these six things who owns them all a lion lives amid the kings (kural : 381)*

*As mentioned above, the strength of a king is primarily based on the mighty army he possesses. During the Middle Ages, especially during the Cholas period, there were regiments like the Valangai Velaikkaras, Idangai, valangai. Although the king acts as the head of a nation's forces, each force has its own commanding officers. They are known as Senapati or Senapati. The leader of a regiment is known as the headman , Dandanayakam or Mahadandanayakam. Governments have maintained various types of armies such as infantry, elephants, cavalry, and naval forces. They have gone by sea and taken possession of the neighbor hoods. Not only the kings but also the trade groups maintained troops with archers to support the government and guard the trade. This article study on their army management as revealed through inscriptions.*

***Keywords**: Army, Valangai – Idangai, Velaikkaarar, Thandanayagam, Nayakadhanam, Villali, Vaalilaar*

**Citation**

Bhavani, M. "Military Administration of the Cholas as Gleaned from the Middleval Tamil Incriptions" *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 87-93.

**சோழர் படைகளும் வெற்றிச் சிறப்புகளும்**

சோழர்களது வெற்றிச் சிறப்புக்களை அரசர்களுடைய மெய்க்கீர்த்திகளைக் கொண்டு அறியலாம். சோழர்கள் பெரும்படைகளைப்பெற்றிருந்தனர். தம் தேசத்தில் மட்டுமன்றி கடல்கடந்து சென்று படையெடுக்குமளவுக்கு பெரிய படைகளைப் பெற்றிருந்தனர். இதனால் கடல்கடந்த இலங்கை, கடாரம் போன்ற நாடுகளில் தமது ஆட்சியையும் ஏற்படுத்தியிருந்தனர். சோழ அரசு சிறந்ததொரு இராணுவத்தினைப் பெற்றிருந்துள்ளது என்பது தெளிவு.

முதலாம் இராஜராஜன் கட்டிய தஞ்சை ராஜராஜீஸ்வரத்திற்கு தமிழகத்தின் சோழநாடு தவிர்த்த பிறநாடுகளை வென்று சிவனுக்கு பல ஆபரணங்களை கொடை வழங்கியுள்ளமையை தஞ்சாவூர் இராஜராஜீஸ்வரத்துக் கல்வெட்டு இவ்வாறாக குறிப்பிடுகிறது "சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்துகொண்ட பண்டாரங்களிலும் கொடுத்த பொன்னின் சின்னங்களும் பொன்னின் திருவாபரணங்களும்" (SII, vol.II, 1) போரில் வெற்றிப்பெற்று உயிருடன் திரும்பவேண்டும் என்று மன்னர்களும் பிறரும் இறைவனை வேண்டிக்கொண்டு காணிக்கை செலுத்தியுள்ளனர். (SII, vol.II, 64) "மூவேந்தவேளான் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் கோழிப்போரில் ஊத்தையட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில்" அ கர்நாடக மாநிலத்தில் அறத்தின்வழி ஆட்சி செய்த சாளுக்கிய மன்னர் சத்யாஸ்ரயதேவனை கொடுமையான முறையில் முதலாம் இராஜராஜன் ஒன்பது இலட்சம் படைவீரர்களைக்கொண்டு தோற்கடித்தார் என்ற செய்தியினை (900000) கர்நாடக மாநிலம் ஹொட்டூர் என்ற பகுதியிலுள்ள கன்னடமொழியிலுள்ள தனி நடுகல் ஒன்று குறிப்பிடுகிறது (EI, vol. XVI, no. 11, pp. 73 - 75). இதேபோல் சாளுக்கியமன்னன் விமலாதித்தனை முதலாம் இராஜேந்திர சோழன் மகேந்திரகிரியில் தோற்கடித்து ஜெயஸ்தம்பம் நாட்டியமையை கர்நாடக மாநிலம் மகேந்திரகிரியிலுள்ள கோகரணேஸ்வரர் கோயிலுள்ளக் கல்வெட்டுக்குறிப்பிடுகிறது. (SII, vol.V, no. 1352)

**கைக்கோளப்படை**

"கைக்கோளப்படை" என்பது இருந்துள்ளது. இவர்கள் ஒவ்வொரு அரசரால் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர். காட்டாக "ராஜராஜ தெரிந்த கைக்கோளர்" என்றால் இராஜராஜனால் தெரிவு (select) செய்யப்பெற்ற படையினர் என்று பொருள். சோழர் காலத்திற்கு பிற்பட்ட காலத்தில் நெசவாளர்களாலும் "கைக்கோளர்" என்று அழைக்கப்பெற்றுள்ளனர். ஆனால் சோழர் காலத்து கைக்கோளர்கள் நெசவு செய்ததற்கான சான்றுகள் இல்லை என்கிறார் பேரா. எ. சுப்பராயலு.

**வேளைக்காரர்**

படைவீரரைக் குறிப்பதற்கு "வேளைக்காரர்" என்ற ஒரு தொடர் முதலாம் இராஜராஜன் காலந்தொட்டு காணப்பெறுகிறது. 3 ஆம் காலக்கட்டத்திற்கு (1179) பிறகு இடம்பெறவில்லை. வலங்கை வேளைக்காரர், இடங்கை வேளைக்காரர், சிறுதனம் போன்ற பிரிவினர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

தேவைப்படும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (seson - வேளை) மட்டும் இவர்கள் தேர்வு செய்யப்பெற்றிருக்கலாம். அல்லது அரசர்க்கு அருகிலேயே இருந்து அவர்க்கு பாதுகாப்பு தரும் அரிய பணியை மேற்கொண்டு தேவைப்படும் வேளையில் தங்கள் உயிரையும் அரசர்க்காகத் தியாகம் செய்திருக்கலாம். இதனால் இவர்கள் வேளைக்காரர்கள் என அழைக்கப் பெற்றிருக்கலாம் என்று பேராசிரியர். எ. சுப்பராயலு குறிப்பிடுகின்றார். இலங்கையிலும் இத்தகைய ஓர்

*அமைப்பு செயல்பட்டுவந்துள்ளது. பொலன்னறுவையில் வேளைக்கார கல்வெட்டு என்ற ஒன்று தனியே பார்வைக்கு வைக்கப்பெற்றுள்ளது. தளதாப் பெரும்பள்ளி என்ற விகாரயையும் அதன் கம்மியர் சொத்துடைமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை வேளைக்காரரிடம் அபயகிரி மகாவிகாரத்து முதன்மைப் பிரிவான உதுருள் மூளையின் நாயகரான மகைதேரர் முகலன் என்பவர் அமைச்சர் சிலரோடு கூடியிருந்து வேளைக்கார ரை வரவழைத்து இப்பொறுப்பை வழங்கியுள்ளார்.*

*வேளைக்காரர்தங்கள் மகாதந்திரத்தைக்கூட்டி (பெரும்படை) அவர்களுடன்கலந்தாலோசித்து அப்பொறுப்பை ஏற்றுள்ளனர். தஞ்சை பெரியக்கோயில் கல்வெட்டில் இசைக்கலைஞர்களுள் பலரும் வலங்கை வேளைக்காரர் என்ற பின்னொட்டுடன் காணப்பெறுகின்றனர். 1. அழகிய சோழத்தெரிந்த வலங்கை வேலைக்காரரில் ஐயாரன் அந்தரி 2. க்ஷத்ரிய சிகாமணித் தெரிந்த வலங்கை வேளைக்காரரினல் சத்தி ஆரூரன். பக்கவாதியருள் பெரும்பாலானோர் படை வீரர்களாகவுள்ளனர். வலங்கைவேளைக்காரர், வீழசோழ அணுக்கன் என்ற அவர்களது பெயர்கள் இதற்குச் சான்றாகும்* (SII, vol.II,no.66)*. ஒருவேளை போர் இல்லாத காலங்களில் இவர்கள் கோயில் திருப்பணிகளில் பங்கேற்றிருப்பர் போல் உள்ளது.*

**சேனாபதீ**

*இவரே இராணுவப் படையின் தலைமை அதிகாரி. இப்பதவி சோழர் காலத்தில் முதல் காலக்கட்டத்தின் தொடக்கம் வரையில் மட்டுமே காணப்பெறுகிறது. இவர்களுக்கு அடுத்த நிலையில் ''தண்டநாயகம்'' என்ற பதவி உள்ளது. சேனாதிபதி பதவியில் ''பிரம்ம'' பட்டம் பெற்றவரே அதிகம் இடம்பெற்றுள்ளனர். சேனாதிபதிகள் போர்காலங்களில் அரசுக்கு படைநடத்தி உதவுவதுடன் அரசர்களின் ஆணையை ஏற்று பல நன்கொடைகளையும் வழங்கியுள்ளனர். தஞ்சை இராஜராஜீஸ்வரத்து சுற்றுமாளிகையை எடுப்பித்தவர் ராமன் கிருஷ்ணன் என்ற சேனாதிபதி ஆவார். இவர் பிரமராயன் என்ற பட்டம் பெற்ற பிராமணர் ஆவார்.*

**நாயகம், தண்டநாயகம், படைமுதலி, சேனாதிபதீ**

*இராணுவத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு தலைவர் இருந்தார். அவர் ''நாயகம்'' என்றும் பிற்காலங்களில் ''படைமுதலி'' என்றும் அழைக்கப்பெற்றார். நாயகத்தின் தலைமை அதிகாரியாக ''தண்டநாயகம்'' செயல்பட்டார். ஒட்டு மொத்த இராணுவத்திற்கு தலைவர் ''சேனாதிபதி'' ஆவார்.*

**நியாயம், நியாயத்தார்**

*சோழ இராணுவத்தினர் ''நியாயம்'' அல்லது ''நியாயத்தார்'' என அழைக்கப் பெற்றுள்ளனர். நியாயத்தார்களில் இருந்த ''பெருந்தனம்'', ''சிறுதனம்'' பிரிவினருக்கு ''வீரபோக'' நிலங்கள் வழங்கப்பெற்றுள்ளன.*

**படைவீடு, கடகம், பரிக்ரிஹம்**

*தலைநகரங்களில் இருக்கும் அரசுப் படை முகாம்கள் ''படைவீடு'' ''கடகம்'', ''பரிக்ரிஹம்'' என்று அழைக்கப்பெற்றுள்ளது. பிற்காலத்தில் ''பாடிகாவல்'' பிரிவினர் அரசி ற்குப் படை கொடுத்து உதவியுள்ளனர். பரிவாரத்தார் என்போர் அரசரின் அரண்மனையைக் காவல் செய்யும் பரிவாரத்தாரும் இருந்துள்ளனர்.*

**வீரசோழ, வீரஅணுக்கன்**

*கோயில்களைப் பாதுகாப்பதில் "வீரஅணுக்கர்கள்" இருந்துள்ளனர். தமிழகத்திற்கு வெளியிலுள்ள மாநிலங்களிலிருந்து படை வீரர்கள் தேர்வு செய்யப்பெற்றுள்ளனர். கர்நாடகப் பகுதியிலிருந்து வந்தவர்கள் "கன்னாடக கடுத்தலை" என்றும் மலையாள காலாட்படைகள் "மலையாண் ஒற்றைச் சேவகர்கள்" என்றும் அழைக்கப்பெற்றுள்ளனர். சோழர் படையில் "காலாட் படையே" பெரும் படையாக இருந்தது. காலாட்படை வீரர்கள், வில்லிகள் (வில்வீரர்), வாளிலார் (வாள் வீரர்) கொண்டவர் (ஈட்டிவீரர்) என்று அழைக்கப்பெற்றுள்ளனர்.*

**சேவகர் பெற்ற கொடை நிலங்கள்**

*வீரர்களின் திறமையைப் பாராட்டி அரசு அலுவலர்களுக்கு நிலக்கொடைகள் வழங்கியுள்ளனர். அவை "வீரபோகம்", "படைப்பற்று" என்று வழங்கப்பெற்றுள்ளன.*

**தென்னவன் ஆபத்துதவிகள்**

*அரசர்கள் வெளியிடங்களுக்கு செல்லும் பொழுது அவர்கள் பாதுகாப்பிற்காகக் காவலர்கள் சென்றனர் அவர்களே "ஆபத்துதவிகள்" என்றழைக்கப்பட்டுள்ளனர் . இவர்கள் எப்பொழுதும் அரசருடனே இருந்தனர். அரசர்கள் இறந்துவிட்டால் அச்சிதையில் விழுந்து இவர்களும் இறந்துள்ளனர். மேல் உலகிலும் அரசருக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறு செய்துள்ளனர். அரசருக்காக சமைக்கப்படுகின்ற உணவுகளை அரசர் உண்பதற்கு முன்னர் அவ்வுணவில் நச்சுத்தன்மை உள்ளதா என கண்டறிய வேண்டி தாம் முதலில் உண்டு பின்னர் அரசருக்கு வழங்கியுள்ளனர்.*

**நாயக்கதனம்**

*16 ஆம் நூற்றாண்டில் வடார்க்காடு, தென்னார்காடு மாவட்டங்களில் படைவீடு, செஞ்சி ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டிருந்த நாயக்கர்களுக்கு அவர்கள் ஆற்றிய படை சேவகத்திற்காக விஜயநகர அரசர்கள் மதிப்பூதிய நிலங்களை அளித்துள்ளனர். இந்நிலங்கள் "நாயக்கத்தனங்கள்" என அழைக்கப்பெற்றுள்ளன.*

**படைத்தலைவருக்கு வழங்கப்பட்ட நிலக்கொடை**

*அமரஓபுலி, அமர உம்புலிகை, அமர நாயக்கதனம், நாயக்கதனம் என்பவை நாயக்கர்களுக்கு (படைத்தலைவர்) வழங்கப்பட்ட நிலக்கொடையாகும். பொது ஆண்டு 15 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்தே இத்தகைய நிலக்கொடைகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. கிருஷ்ணதேவராயருக்கு முன்பு சிறிய அரசுகள் தனியாக ஆட்சி செய்தனர். அரசை ஒற்றுமைப்படுத்த எண்ணிய கிருஷ்ணதேவராயர் அவரவருக்குரிய பகுதிகளைப் பிரித்துக்கொடுத்தார். (இவர் சோழமன்னன் இராஜராஜனைப்போல் சிறந்த ஆட்சியாளர்) கிருஷ்ணதேவராயர் காலத்திலேயே இது நாயக்கர் தானம் என்று பெயரிட்டு அழைக்கப்பட்டது. நாயக்கர் அல்லது ராகுத்தர் என்பது படைதளபதிகளுக்கு வழங்கப்பெற்ற பெயராகும். "ராகுத்தர்" என்பது குதிரைப்படைத் தலைவர் ஆவர்.*

**படைக்குழுக்கள்**

*வன்னிய நாயக்கர், சாலுவ நாயக்கர்பாடி, கொல்லநாயக்கர்பாடி தெலுங்கு ராகுத்தர் போன்ற பெயர்களில் படைக்குழுக்கள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. நாயக்கர்*

*படைத்தளபதிகள் அரசருடைய படையெடுப்புகளில் பெரும் வெற்றியைப் பெற்றுத்தந்துள்ளனர். பல கோட்டைகளை (28)த் தகர்த்து பெரும்வெற்றியைக் குவித்துள்ளனர். 2 ஆம் கம்பண உடையார் காலத்தில் மாராய நாயக்கர் மஞ்சதாலமலை, புதுப்பட்டனம், நிலக்கங்கரையப் பட்டனம், மதராசப்பட்டனம் போன்ற இடங்களில் உள்ள கோட்டைகளைத் தகர்த்து சம்புவராயரை வெற்றிக் கொண்டுள்ளனர். கல்வெட்டில் இந்த நாயக்கர் போர் புரிந்த விதம் பெருமையாக குறிப்பிடப்பெற்றுள்ளது.*

**வலங்கை இடங்கை பிரிவுகள்**

*இடைக்காலத் தமிழகச் சமூக அமைப்பில் வலங்கை இடங்கைப் பிரிவினர் குறிப்பிடத்தக்க வகுப்பினராகத் திகழ்ந்துள்ளனர். இவர்கள் தோற்றம் குறித்துத் தெளிவான சான்றுகள் இல்லை. கரிகாற் சோழன் காலத்தில் தோன்றியதாக செவிவழிச் செய்திகள் உள்ளன. இவர்கள் தங்களுக்குள் அடிக்கடி பூசலிட்டு வந்துள்ளனர். இவர்கள் இருவருக்கும் நடைபெற்ற பூசல்களை அரசரிடம் சென்று முறையிடச் செல்லும் பொழுது வலப்பக்கம் ஒரு பிரிவினரும் இடப்பக்கம் ஒரு பிரிவினரும் நின்று முறையிடுவர். இதனால் அரசருக்கு வலப்பக்கம் நின்றவர் வலங்கை என்றும் இடப்பக்கம் நின்றவர் இடங்கை என்றும் அழைக்கப்பெற்றிருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். கல்வெட்டுகளில் இவர்கள் சோழர் காலத்திலிருந்தே காணப்பெறுகின்றனர். சோழர் காலத்தில் படைப்பிரிவுகளாக இருந்து விஜயநகர காலத்தில் சாதிப் பிரிவுகளாக வளர்ந்து சமூகத்தில் பல மாற்றங்களையும் புரட்சிகளையும் செய்துள்ளனர்.*

**வலங்கை இடங்கை பூசல்கள்**

*சோழர் காலம் முதல் பொ.ஆ.20ஆம் நூற்றாண்டுவரையில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் ஆவணங்களில் காணக்கிடைக்கின்றன. ஆங்கிலேய கம்பெனியார் ஆவணங்களில் இவ்வகுப்பினர் ஒருவரை ஒருவர் தாக்கிச் சண்டையிட்டுள்ளதை பற்றிய குறிப்புகள் உள்ளன. பொ.ஆ.20ஆம் நூற்றாண்டில் இவர்களது பூசலினால் சென்னை நகரத் தெருக்களில் இரத்தவெள்ளம் ஓடியுள்ளதாக கே.கே. பிள்ளை, கே.ஏ.நீலகண்டசாஸ்திரி போன்ற வரலாற்றுப்பேரறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.*

*தோற்றம் தொட்டே இவ்விருபிரிவினரிடையே பூசல்கள் நிகழ்ந்துள்ளன. சோழ மன்னன் முதலாம் குலோத்துங்காது பொ.ஆ.11ஆம் ஆட்சியாண்டு (1081) ஸ்ரீரங்கம் கல்வெட்டொன்று இடங்கை வலங்கையினரிடைய ஏற்பட்ட மிகப்பெரிய பூசலைப்பற்றிக் குறிப்பிடுகிறது .*

*இவ்விருப்பிரிவினரிடையே ஏற்பட்ட பூசல்களினால் ஊருக்குத் தீயிட்டும் கோயில்களைக் கொள்ளையிட்டும் உள்ளனர். ஆனால் இவ்விரு பிரிவினருக்கிடையிலான பூசல்களுக்கான காரணங்களை கல்வெட்டுகள் குறிப்பிடவில்லை. வலங்கைப் பிரிவினருக்கு வழங்கப்பெற்ற எண்ணற்ற சலுகைகள், அரசாங்கச் செல்வாக்கு, விருதுகள், வாழ்க்கை வசதிகள், நலன்கள் போன்ற சிறப்புகள் வழங்கப்பெற்றுள்ளன. இத்தகைய சலுகைகள் தங்களுக்கு வழங்கப்பெறாமையைக் கண்டு மனம் புழுங்கியதால்தான் இடங்கைப் பிரிவினர் வலங்கைப் பிரிவினருடன் பூசலில் ஈடுபட்டுள்ளனர் எனக் கே.கே.பிள்ளை கருதியுள்ளார்.*

*கோயில் சடங்குகளின் போது அந்தஸ்து பெறுதல், சிறப்பு உரிமைகள் பெறுதல், தமக்கென அடையாளங்களைப் பெறுவதில் சச்சரவுகள் ஏற்பட்டுள்ளன. இடங்கை, வலங்கை வேறுபாடு பிரச்சனையைத் தீர்க்க வேண்டி திருவண்ணாமலையில் விஜயபூபதி*

*நடவடிக்கை எடுத்துள்ளார். வலங்கையினர் பெற்றிருக்கும் சங்கு, தண்டு, யானை, சாமரம் போன்ற சிறப்புரிமைகளை இடங்கை பிரிவினருக்கும் அளித்துள்ளார். இருப்பினும் இவர்களுடைய சர்ச்சைகள் தொடர்ந்து இருந்து வந்துள்ளன. அரியண்ண உடையார் ஆட்சியில் தென்னார்க்காடு பகுதியில் வலங்கை, இடங்கை சச்சரவுகள் 4 ஆண்டுகள் தொடர்ந்து இருந்துள்ளன. இதில் பல உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டுள்ளது.*

*நாட்டின் ஒரு சில பகுதிகளில் வாழும் பிரிவினருக்கு மட்டும் சலுகை வழங்கியுள்ளனர். விரிஞ்சிபுரம், காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கைக்கோளர்களுக்கு சங்கு, பல்லக்கு போன்ற சலுகைகள் வழங்கப்பெற்றுள்ளன. ஆனால் வழுதிலம்பட்டில் வழங்கப்படவில்லை. (வழுதிலம்பட்டில் வாழ்ந்த கைக்கோள முதலிகளுக்கு இச்சலுகைகள் 1485 இல் வழங்கப்பெற்றுள்ளன). “கைக்கோளர்கள்” “கைக்கோள முதலிகள்” என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களும் கையில் கோள் கொண்டு சண்டையிட்ட வீரர்கள் என்று கருதப்பெறுகின்றனர். பிற்காலங்களில் இவர்கள் நெசவுத்தொழிலை மேற்கொண்டுள்ளனர்.*

**வணிக்குழுக்களின் வீரர்படைகள்**

*அரசர்கள் மட்டுமன்றி வணிகக்குழுக்களும் தங்களுக்கென தனியே படைகளைப் பராமரித்துள்ளனர். தமிழ் வணிகக்குழுக்களுள் பிரசித்தமானது ஐந்நூற்றுவர் வணிக்குழுக்களாகும். இக்குழு திசையாயிரத்து ஐந்நூற்றுவர், பத்னெண் விஷையம், வீரவளஞ்சியர் என்று பலவாறாக அழைக்கப்பெற்றுள்ளனர். இத்தகைய வணிகக்குழுக்கள் தங்களின் காவலுக்கென வீரக்கொடி, எறிவீரர் முனைவீரர், கொங்கவாளர்,போன்ற படைவீரர்களை பெற்றிருந்தது. இவர்களுக்கென வீரதளங்கள் (எ.சுப்பராயலு, தொ.2. பக். 571)வீரப்பட்டினங்கள் அல்லது எறிவீரப்பட்டினங்களையும் ஏற்படுத்தியுள்ளது இதற்கான சாசனங்களும் நமக்கு கிடைக்கின்றன.*

**முடிவுரை**

*நீரின்றி அமையாது உலகு என்பது போல படையின்றி அமையாது அரசு. ஒவ்வொரு அரசின் வளர்ச்சியில் படைகள் இன்றியமையாதப் பங்காற்றியுள்ளனர். பல அரசுகளின் வீழ்ச்சிக்கும் இப்படைகளே காரணமாகும். பலம் குன்றிய அரசர்கள் காலத்தில் படையை நடத்திய தளபதிகளே ஆட்சியைக் கைப்பற்றிய நிகழ்வுகள் வரலாற்றில் பலவுண்டு. ஒரு அரசுக்கு சிற்றரசர்களாகவிருந்தோர் தலைமை அரசின் பலம் குன்றும் போது அரசையே கைப்பற்றிவிடுவர் . இது எல்லா பேரரசுளுக்கும் பொருந்தும். அவ்விதம் சிறியாதாக உருவான அரசுகள் உலகை ஆளும் அளவு பேரரசானது இப்படைகளின் வலிமையினால்தான் என்பது இக்கட்டுரை வழியாக தெளிவாக்கப்பெற்றுள்ளது.*

**நோக்கீட்டு நூல்கள்**

1. ARE - Annual Reports on Indian Epigraphy
2. EI - Epigraphia Indica
3. SII - South Indian Inscriptions
4. தமிழ்நாட்டு வரலாறு பாண்டியப்பெருவேந்தர் காலம், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை, 2000.,
5. நீலகண்டசாஸ்திரி, கே.ஏ., (1989.) சோழர்கள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,

6. *பத்மநாதன், சி., (2013) இலங்கைத்தமிழ்ச் சாசனங்கள் -* II, *இந்துசமயக் கலாச்சாரத் திணைக்களம், கொழும்பு, இலங்கை..*
7. *பிள்ளை. கே.கே, (2000) தமிழக வரலாறும் பண்பாடும், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.*
8. Noboru Karashima, (2001)South India Under Vijayanagar Rule, OUP.
9. Subbarayalu,Y., (2014) Inscriptions of the Vijayanagara Rulers, vol, 5, part1 (Tamil Inscriptions), ICHR, Bangalore, p. xvi.